விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 353 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை (06.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## சுழிபுரத்தில் விபத்து; மாணவன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்) வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி 15

## பென்சிலை எடுக்க நீர்த்தேக்கத்தில் இறங்கிய சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்) நீர்த்தேக்கத்தில் வீழ்ந்த பென்சிலை எடுக்க இறங்கிய மூன்றரை வயதுச் சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரி 15

## இருபாலையில் கிணற்றில் தவறி விழுந்த 4 வயதுச் சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்) இருபாலையில் கிணற்றில் தவறிவிழுந்த சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். இருபாலை கிழக்கைச் 15

## கிளிநொச்சியில் பெண் மரணம்
### 14 வயது மகனிடம் விசாரணை

(முறிகண்டி) கிளிநொச்சியில் விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி தருமபுரம் 15

# ஊடக சுதந்திரம் மட்டுப்படுத்தப்படாது
## ஊடக பிரதானிகளிடம் ஜனாதிபதி



(கொழும்பு)

ஊடக சுதந்திரத்தை எந்த வகையிலும் தடுக்கவோ மட்டுப்படுத்தவோ தாம் தயாரில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரி 15

# ஐ.எம்.எப் கூறியதாக பொய் சொன்ன ரணில் அரசாங்கம்
## உண்மையைப் போட்டுடைத்த அமைச்சர் ஹந்துன்நெத்தி



(கொழும்பு)

ஐ.எம்.எப் கூறியதால் வேறுவழியின்றி தொழிற்சாலைகளை விற்பனை செய்கின்றோம் என்று முன்னைய அரசாங்கம் பொய் கூறியதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வங்காள விரிகுடாவில் 7ஆம் திகதி புதிய காற்று சுழற்சி

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 7ஆம் திகதி புதிய காற்று சுழற்சி 15

### அமெ.இராஜாங்க செயலாளர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்கு மற்றும்மத்திய ஆசிய விவகாரங்களுக் 15

## மதுபான அனுமதிப்பத்திரத்துக்கு பரிந்துரைத்த அரசியல்வாதிகளின் பெயர் வெளியிடப்படும் - அமைச்சர் நலிந்த



(கொழும்பு)

மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சிபாரிசு செய்த அரசியல்வாதிகளின் பெயர்ப் பட்டியல் விசாரணைகளின் பின்னர் வெளியிடப்படும் என 15

## ஏழாலையில் கூரையை பிரித்து நகை திருட்டு
### இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கில் வீடு புகுந்து தாலிக்கொடி உட்பட்ட சில தங்க நகைகள் என 9 ¾ பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன. 16

## ஐ.எம்.எப் உடன்படிக்கை திருத்தப்பட்டுள்ளது
### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் திருத்தப்பட்ட விடயங்கள் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் தெரியவரும் என சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க 02

## 2025இன் முதல் 4 மாதங்களுக்கு ரூ.1,402 பில்லியன் நிதி ஒதுக்கீடு
### தற்காலிக பட்ஜெட் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2025ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களுக்கான அரச செயற்பாடுகள் மற்றும் கடன் சேவைகளைத் தொடர்வதற்கான இடைக்கால கணக்கறிக்கை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

(2700)


## இதய அஞ்சலி

யாழ்ப்பாண பல்கலைக்கழக எமது அணியின் வர்த்தகப்பிரிவு நண்பனும் கணக்காய்வு பிரிவு அதிகாரி( தேசிய சேமிப்பு வங்கி தலைமையகம், கொழும்பு) திரு **ஜீவரெட்ணம் பிரதீபன்** அவர்களின் அன்புத் தாயார்



**அமரர் திருமதி சத்தியவதி ஜீவரெட்ணம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
**யாழ்.பல்கலைக்கழக 1995/96 அணி நண்பர்கள்**

(C-1732)

## மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1952 - 09 - 14 | 2024 - 12 - 05 |

## இந்திராணிமலர் இராமலிங்கம்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணிமலர் இராமலிங்கம் (வபா) அவர்கள் 05.12.2024 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மருமகளும் இராமலிங்கம் (கண்ணன்) அவர்களின் பாசமிகு மனைவியும் சந்திரமலர், ஜெயமலர், ரஞ்சிதமலர், செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிரிஜா, கிருஸ்ணகுமார், கிரிசாந்தி, கிருஸ்ணவேணி,கிஷோக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மராஜ், ஜெயவேணி, காலஞ்சென்ற சிவரூபன் மற்றும் டினேஸ்குமார், கோமதி ஆகியோரின் மாமியாரும் பிருதுவி, கம்சாயினி, கோசிகா, லிபின்சன், சங்கவி, ரதுசாந்தி, திவ்வியன், சயந்துவி, சயந்துயன், பிரசாளினி, கிருசாளினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2024) வெள்ளிக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு.

தகவல் : குடும்பத்தினர்
077 9790 851, 077 8759 403

(c-1727)

## ஐ.எம்.எப் உட...

தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அடுத்த மூன்று ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் நாங்கள் செயற்பட வேண்டும் என்று நாங்கள் கூறினோம்.

அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கிறோம். ஆம், அது திருத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அந்தத் திருத்தங்களின் விடயங்களை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

பாராளுமன்றத்திற்கே நிதி அதிகாரம் உள்ளது. அனுபவமிக்க ரணில் விக்கிரமசிங்க எல்லா இடங்களிலும் VAT குறைக்கப்படவில்லை என்று பொய் சொன்னோம் என்றார். VAT குறைக்கப்பட வேண்டும்.

VAT குறைக்கப்படவுள்ளது. யாரால் குறைக்க முடியும்? இது ஒரு நிதி சட்டமூலம்.

அவரும் நமது பிரதமருக்கு டியூஷன் கொடுக்க முயன்றார். பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மட்டுமே வரிகளை குறைக்க முடியும். முதல் திட்டம் வரவு செலவுத்திட்டத்தில் செயற்படுத்தப்படும் என்றார். (ம-7)

## 2025 இன்...

பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் இடைக்கால கணக்கறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவாதம் இன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால கணக்கு முன்மொழிவின் படி, அடுத்து வரும் நான்கு மாதங்களுக்கான மொத்த உத்தேச ஒதுக்கீடு ரூபா ஆயிரத்து 402 பில்லியன் ஆகும்.

இந்த ஒதுக்கீடு அரசாங்கத்தின் இடைக்கால வாக்கெடுப்பு, தொடர் மற்றும் மூலதனச் செலவுகள், பொதுக் கடன் சேவைகள் மற்றும் கடன் மறுசீரமைப்புச் செலவுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவு கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உத்தேச முன்மொழிவின் படி, அதிகபட்ச ஒதுக்கீடு ரூபா. 220.06 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய அமைச்சுக்களும், அவற்றுக்காக முன்மொழியப்பட்டுள்ள ஒதுக்கீடும் வருமாறு,

நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - ரூபா 186.02 பில்லியன், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு - ரூபா 170.47 பில்லியன், சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சு - ரூபா 161.99 பில்லியன், பாதுகாப்பு அமைச்சு - ரூபா142.95 பில்லியன், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு ரூபா 92 பில்லியன், விவசாய நீர்பாசனம், கால்நடைகள், விவசாய அமைச்சு - ரூபா 67.36 பில்லியன். (ம-7)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18.04.1953 | 28.11.2022 |

## திருமதி பூலோகம் கோபாலகிருஷ்ணன்

**திதி : பூர்வபக்க பஞ்சமி - 06.12.2024**

ஆண்டுகள் இரண்டு ஓடியே சென்றதம்மா
அன்னையே உன் நினைவுகள் எந்நாளும் இருக்குதம்மா
எங்கள் உயர்விற்காய் நல் வழிகாட்டிய அம்மாவே
இப்போதும் எம்மை நிழலாய்க் காக்கின்றாய் அம்மாவே!
வையகம் விட்டேகிய வானுறை தெய்வமே! அம்மாவே!
இமையாணன் சிறிமுருகனிடம் இளைப்பாறும் எங்கள் அம்மாவே!

(C-1730)

செல்விளவு,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்க விரைவில் நடவடிக்கை

## உறுதிபடத் தெரிவித்தார் நீதி அமைச்சர்



(கொழும்பு)

**அரசியல் கைதிகள் மற்றும் சாட்சிகள் இல்லாமல் நீண்ட காலம் சிறையில் இருப்பவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். அதற்காக ஓரிரு மாதங்கள் எமக்குச் சந்தர்ப்பம் தாருங்கள் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் தமிழ் அரசு கட்சி உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் உரையாற்றுகையில் தெரிவித்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் கைதிகளை விடுவிப்பதாக நாங்கள் எமது கொள்கை உரையிலும் வாக்குறுதி அளித்திருக்கிறோம். என்றாலும் அதனை ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்தில் செய்வது கடினம்.

அதனால் சம்பந்தப்பட்ட சட்ட பிரிவினருடன் கலந்துரையாடி மிக விரைவில் அரசியல் கைதிகள் அல்லது சாட்சி இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்போம் அது தொடர்வில் எந்த பிரச்சினையும் இல்லை.

அதேபோன்று ஊழல் மோசடி தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்.

குறிப்பாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்போம். வழக்கு ஒன்று தாக்கல் செய்தால் அதில் இருந்து வழக்கிச் செல்லும் வகையில் வழக்குகளை தயாரிக்க முடியாது. உறுதியான சாட்சி இருக்க வேண்டும்.

அதனால் 70 வருட காலம் சென்ற இந்த பாதையை மாற்றியமைக்க வேண்டும். அதற்கு எமக்கு இன்னும் ஓரிரு மாதங்கள் தாருங்கள். அதன்போது நீங்கள் தெரிவித்த விடயங்கள் இடம்பெறும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# உப்புக்கு தட்டுப்பாடு விலை உயர வாய்ப்பு

## வியாபாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலத்தில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்றும் இதனால் விலை உயர வாய்ப்புள்ளதாகவும் வியாபாரிகள் எச்சரித்துள்ளனர்.

எனவே இதற்கு பரிகாரமாக இந்தியாவில் இருந்து உப்பை விரைவில் இறக்குமதி செய்ய வேண்டும் என தொழிலதிபர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மழையால் உப்பு உற்பத்தி இல்லை, விளைந்த உப்பை அறுவடை செய்ய முடியாமல் வியாபாரிகள் தவித்து வருகின்றனர்.

இதற்கிடையில் உப்பு பாத்திகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் அதிக அளவு உப்பு கரைந்து நாசமாகியுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரு நாளைக்கு சராசரியாக 5 கிராம் உப்பை ஒருவர் சாப்பிட வேண்டும் என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

அதுமட்டுமின்றி சிற்றுண்டி மற்றும் உலர் உணவு உற்பத்தியிலும் உப்பு பயன்படுத்தப்படுகிறது. விவசாய நடவடிக்கைகளிலும் உப்பைப் பயன்படுத்துகின்றனர்.

அதன்படி ஆண்டுக்கு குறைந்தபட்சம் 38,325 மெட்ரிக் தொன் உப்பும், 46,000 மெட்ரிக் தொன் உப்பும் தேவைப்படுகிறது.

அம்பாந்தோட்டை, புத்தளம், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் உள்ள தனியார் மற்றும் அரச சுரங்கங்களில் மட்டுமே இந்த நாட்டில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. (நி-8)

# வீதித்தடை தொடர்பில்

## மாநகர சபையின் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது வைத்திய சாலை வீதி மதகு புனரமைப்பு வேலை நேற்று முன்தினம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் ஸ்டேசன் வீதி மருத்துவமனைச் சந்தியிலிருந்து 3 ஆம் குறுக்குத்தெரு மருத்துவமனை வீதி வரை வேலைத்தலத்தில் நிலைமையினை கருத்திற்கொண்டு அவ்வீதியினை முழுமையாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே அவ்வீதியில் வாகனங்களில் பயணிப்போர் போக்குவரத்தினை சிரமமின்றி மேற்கொள்ள மாற்றுப்பாதையை பயன்படுத்துமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-8)

# அரிசி தட்டுப்பாட்டிற்கு விரைவில் தீர்வு

## இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய முடிவு

(கொழும்பு)

அரிசி தட்டுப்பாட்டுக்கு விரைவான தீர்வாக, இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யவுள்ளதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியாருக்கும் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் வழங்கிய அனுமதியின் பிரகாரம் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள டிசம்பர் 31 ஆம் திகதி வரை போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் சிறிதளவு அரிசியை இறக்குமதி செய்ய முடியும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-8)

# லெபனானில் பதற்றம்

## இலங்கையர்கள் வெளியேற்றம்

இஸ்ரேலுடனான மோதல் காரணமாக, இலங்கைத் தொழிலாளர்களை லெபனானில் இருந்து வெளியேற்றுவதற்கு தேவையான ஏற்பாடுகளை அங்குள்ள இலங்கை தூதரகம் மேற்கொண்டுள்ளது.

சர்வதேச குடியேற்ற அமைப்புடன் இணைந்து இந்த வெளியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை தூதரகம் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, 26 இலங்கையர்கள் கொண்ட அண்மைய குழு நேற்று முன்தினம் மாலை கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

லெபனானில் உள்ள சர்வதேச குடியேற்ற அமைப்பின் உதவியைப் பாராட்டிய இலங்கைத் தூதரகம், லெபனானில் பதற்றமான சூழ்நிலையில் இருந்தாலும், மிகவும் தேவைப்படும் இலங்கையர்களுக்கு தொடர்ந்து வசதிகளை வழங்குவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதாக நம்பிக்கை தெரிவித்தது.

ஹிஸ்புல்லாவுடனான அதன் போர் நிறுத்தம் சரிந்தால் லெபனானில் மீண்டும் போருக்குத் திரும்புவதாக கடந்த செவ்வாயன்று இஸ்ரேல் அச்சுறுத்தியது.

மேலும் இந்த முறை அதன் தாக்குதல்கள் ஆழமாகச் சென்று லெபனான் அரசையே குறிவைக்கும் என்றும் தெரிவித்தது. (நி-8)

# முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் அரசியல் அழுத்தங்கள் இராது

## ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையுடன் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகையில் அரசியல் பக்கச்சார்பு அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எந்தவொரு அரசியல் அழுத்தங்களும் இனிமேல் இடம்பெறாது.

நாட்டுக்கு உகந்த தூய்மையான முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முழுச் சுதந்திரத்தை இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் ஸ்திரத்தன்மையை போலவே நாட்டுக்குள் நிதி ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அது தொடர்பிலான பாரிய பொறுப்பு முதலீட்டுச் சபைக்கு உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்க போட்டி முடிவுகள்




(யாழ்.வீரர் 2 ஆம் இடம்)

யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் ஏற் பாட்டில் கொக்குவிலில் அமைந்துள்ள செல்வா பலசில் நடத்தப்பட்ட 2 ஆவது சர்வதேச சதுரங்க போட்டியானது கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமான நிலையில் குறித்த போட்டியானது நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ளது.

பத்து சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டியின் முதல் வெற்றி வீரராக சம்பியன் பட்டத்தை இந்தியாவின் நுபைந்ஷா ஷேக் மொஹம்மது வென்றார்.

இவருக்கு வெற்றி கேடயம் பதக்கத்தோடு இலங்கை மதிப்பில் 2 இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான காசோலை என்பன வழங்கப்பட்டன.

இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்ட யாழ் மாவட்ட சதுரங்க வீரர் சிவதனுஜனுக்கு ரூபாய் 1 இலட்சத்து ஐம்பதாயிரம் காசோலையும் மூன்றாவது இடத்தை பெற்றுக் கொண்ட இந்தியாவின் பிரஜ்வால் பிஷெட்க்கு ரூபாய் ஒரு இலட்சம் காசோலையும் வழங்கப்பட்டது.

இதேவேளை பெண்கள் பிரிவில் இலங்கையைச் சேர்ந்த ஜனத்தினி அபயசிங்க சம்பியன் பட்டத்தை வென்றார்.

அத்துடன் போட்டியில் வெவ்வேறு பிரிவுகளில் வென்ற வீரர்களுக்கும் பண பரிசுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

நிறைவு நாளில் பிரதம விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் தலைமை அதிகாரி ராம் மகேஷ், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இப்போட்டியில் எழுநூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட வீரர்கள் இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இலங்கையின் சகல மாவட்டங்களில் இருந்தும் வயது, பால் வேறுபாடின்றி கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 400 | 450 | 550-660 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 800 | 850 | 700 | 850-1000 | 600 |
| தக்காளி | 350 | 350 | 300 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 | 100-150 | 160 |
| கோவா | 180 | 280 | 200 | 250 | 350 |
| கரட் | 160 | 300 | 200 | 200 | 320 |
| பூசணி | 140 | 130 | 150 | 120 | 200 |
| புடோல் | 180 | 250 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 50-70 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 340 | 220 | 350 | -- | 400 |
| பாகற்காய் | 600 | 2000 | 1000 | 650 | 1600 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 200 | 130 | 200 |
| பயற்றங்காய் | 600 | 700 | 600 | 500-600 | 600 |
| லீக்ஸ் | 160 | 300 | 300 | 800 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 650 | -- | 1000 | -- | 1200 |
| போஞ்சி | 600 | 700 | 800 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 150 | 140 | 200 | 150 | 200 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-140 | 150-200 |
| இராசவள்ளி | -- | 800 | 1200 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | 450 | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 120 | 150 | 200 | 100 | 280 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 80 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 130 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 90 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3270

### சாத்ராக்

அதென்ன மழை வந்தா ஸ்கூல் காலேஜ்க்கு மட்டும் லீவு விடுறீங்க.
அப்ப வேலைக்கு போற நாங்க எல்லாம் இடி விழுந்து செத்தா பரவாயில்லையா??



### ஏஞ்சலின்

நெஜமாவே நம்ம லைப் நல்லாதான் போயிட்டு இருக்கா



இல்ல நல்லா போயிட்டு இருக்குனு நம்மல நாமலே ஏமாத்திட்டு இருக்கோமா...

### டேவிட்

வீட்டில் வேலை வாங்குவதற்கு மட்டும் கண்ணா, ராஜா என்று கொஞ்சுவது



மற்ற நேரங்களில் பன்னி எருமை என்று திட்ட வேண்டியது

### சான் பெனிகின்


பிள்ளையை ஏன்டி இப்படிப் போட்டு அடிக்கிறாய்



பின்ன என்னங்க நல்லாப் படிச்சு பெரிய ஆளானால் நல்ல வைப் கிடைப்பா என்று சொன்னா... அப்பா ஏம்மா நல்லா படிக்கலை என்று கேட்கிறான்

### அபிநயன்

வெண்பொங்கலில் இருக்கிற பத்து முந்திரியில் ஒன்று கூட நமக்கு வராது



ஆனால் முப்பது மிளகும் நமக்கு தான் வரும் அது தாங்க நமது வாழ்க்கை

### பிறிசில்லா ஜெனிபர்

100 வயது வரைக்கும் வாழ என்ன செய்ய வேண்டும்.
99 வயது வரைக்கும் உயிரோட இருக்கனும்



எங்கேயோ போய்ட்டடா நீ

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வவு.பாவற்குளம் ஏரியின் பெரும்போகத்திற்கான நீர் திறப்பு

(வவுனியா)

வடமாகாணத்தில் உள்ள பெரிய குளங்களில் ஒன்றான வவுனியா பாவற் குளம் ஏரியின் பெரும்போகத்திற் கான நீர் நேற்று திறந்து வைக்கப் பட்டது.

வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத்சந்திர தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த குளத்தின் கீழ் சிங்கள மொழி பேசும் விவசாயிகள் இடது கரையில் இருந்து திறந்து விடப்படும் நீரை



பயன்படுத்தி வருவதுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூக விவசாயிகள் வலக் கரையில் இருந்து திறந்து விடப்படும் நீரை பயன்படுத்தி இந்த வருடம் நெற்செய்கைக்கு தண்ணீர் விடப் படு கின்றமை விசேட அம்சமாகும்.

27,000 ஏக்கர் அடி கொள்ளளவு கொண்ட பாவற் குளம் ஏரியின் கீழ் சாகுபடி செய் யப் பட்ட நெற்பயிர் களின் அளவு 4600 ஏக்கர்கள் ஆகும்.

இந்த ஏரியின் கீழ் 5000 குடும் பங்கள் விவசாயம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
06 மார்கழி 2024
"பொது வெளிகளில் பெண்களையும் ஆண்களையும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் சமத்துவமாகவும் நடத்துவோம்"
JSAC
16
2024
(சி-1724) யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# கிளிநொச்சியில் தொழிற்சந்தை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செய லகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு இன்று வெள்ளிக்கி ழமை கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலக வளாகத் தில் காலை 9.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை நடை பெறவுள் ளது.

இந்நிகழ்வில் 30 இற்கும் மேற்பட்ட அரச சார்பற்ற தனியார் நிறுவனாங்கள், மற் றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களும் கலந்து கொண்டு தொழில் வாய்ப்பினை வழங்க வுள்ளனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத் தைச் சேர்ந்த தொழில் தேடும் இளை ஞர், யுவதிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற்றுக் கொள்ள முடி யும்.

மேலும் தொழில் வாய்ப் பினை வழங்க விரும்பும் நிறுவனங்களும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் தொழில் நிலையத் துடன் 021228 3739 எனும் இலக்கத் துடன் தொடர்பு கொள்ள முடியும் என கிளி நொச்சி மாவட்ட செயலாளர் எஸ்.முரளி தரன் தெரிவித்துள்ளார். (6-8)

# தலைமன்னார் கடற்பரப்பில் 14 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட 14 இரா மேஸ்வர மீனவர்கள் நேற்று அதி காலை இலங்கை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித்துறை முகத்திலிருந்து நேற்று முன்தினம் காலை மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த நிலையில் தலைமன்னார் கடற்படையினரால் இரண்டு இந்திய இழுவைப் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீன வர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்ட னர்.

கைது செய்யப்பட்ட மீன வர்களும் இழுவைப் படகுக ளும் தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட் டுள்ளதுடன் தலைமன்னார் கடற் படையினர் விசாரணைகளின் பின் னர் குறித்த மீனவர்களை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க உள்ள னர். (6-8-285)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 . 05 . 1967

மறைவு 09 . 12 . 2021

## அமரர். இராசையா யோகராஜா

(விற்பனை மேற்பார்வையாளர் LIC)

திதி: 06.12.2024

மூன்று ஆண்டுகள் சென்றாலும்
மறக்க முடியவில்லை இன்றும்
நீங்காத நினைவலையாய் நிற்குதையா
உம் புன்னகை பூத்த முகம்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

முருகன் கோவில் வீதி,
புலோலி வடமேற்கு,
புலோலி.

குடும்பத்தினர்.

(C-1725)

# இராசிபலன்

06.12. 2024
கார்த்திகை 21, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முற்பகல் 11.22 மணிவரை
திருவோணம் பிற்பகல் 4.52 மணிவரை

சுபநேரம் -6.17-7.47 மணிவரை
இராகுகாலம் 10.47-12.17 மணிவரை
சஷ்டி விரதம்

சந்திராஷ்டமம் -
திருவாதிரை, புநர்பூசம்

வளவன்

**மேஷம்** வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியா கும், பெரிய மனிதர் களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் வெற்றி பெறு வீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** குடும்பத்தில் நில விவந்த குழப்பங்கள் அகலும், அரை குறை யாக இருந்த பணி களை மீதியும் தொடர்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, உறவினர் விவகாரங்க ளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** நீண்ட நாளைய நண் பர் ஒருவரின் நெருங் கிய நட்பு இடம்பெற லாம், வீட்டு உபயோ கப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண் களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**கன்னி** மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட் களாக தள்ளிப் போட்டு வந்த காரிய மொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், புண்ணிய காரியங் களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** செல்லும் இடங்க ளில் சிந்தனை ஆற் றலால் சிறப்படை வீர்கள், புதிய பொருட் களை வாங்கும் எண்ணம் உரு வாகும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** சேமிப்பு உயர்வதற் கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், வளர்ச்சி கூடும் நாள், விர தம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு** கொடுக்கல் வாங்கல் கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன் மையும் உயர்வும் கிட் டும், வழிபாட்டில் ஆர்வம் காட் டுவீர்கள், எதிர்பாராத தனவர வுகள் வந்து சேரலாம்.

**மகரம்** தொட்ட காரியங்கள் வெற்றிபெற அம்பி கையை வழிபட வேண்டிய நாள், பாரா ட்டும் புகழும் கூடும், பொது நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள்.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில் லாமல் வேலைகளைச் செய்வீர்கள், வெளி யூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிரபலமான வர்களின் சந்திப்பு இடம்பெற லாம், சுப விரயங்கள் கூடும்.

**மீனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், நீண்ட நாளைய விருப் பங்கள் நிறைவேறும் வாய்ப் புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

வயதானவர்களுக்கு அவர்கள் கேட்பதற்கு முன்னிலை கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் அழிவது தெரியவில்லையா?

## வயலில் இறங்கி விவசாயிகள் போராட்டம்

(சாவகச்சேரி)

**தொண்டைமானாறு தடுப்பணையைத் திறந்து விட்டு தமது நெற் பயிர்களை அழிவில் இருந்து காப்பாற்றக்கோரி தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி நாவற்காடு கிராம விவசாயிகள் நேற்று வயலில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



தொண்டைமானாறு தடுப்பணையை மூடி வைத்திருப்பதால் தென்மராட்சி வரணிப் பிரதேச வயல்களில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் வடிந்து செல்ல முடியாமல் வயல் நிலங்களில் தேங்கி பயிரை அழிவடையச் செய்வதால் விரக்தியடைந்த விவசாயிகள் மேற்படி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது "அநுர அரசே கண்ணைத் திற. ஏழை விவசாயிகளின் வாழ்விற்கு வழி விடு. தடுப்பணையை திறந்து விடுவதில் என்ன பிரச்சினை. நாற்பதாயிரம் ஏக்கர் பயிர்கள் அழிவது தெரியவில்லையா?. அழிக்காதே அழிக்காதே விவசாயத்தை அழிக்காதே" போன்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தொண்டைமானாறு தடுப்பணையை மூடி வைத்திருப்பதால் தென்மராட்சியில் நாற்பதாயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் அழிவைச் சந்திக்கும் நிலையில் காணப்படுவதாகவும்-பெரும்பாலான நெற்பயிர்கள் அழுகி அழிவைச் சந்தித்திருப்பதாகவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் நாவற்காடு கிராமத்தைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் இது தொடர்பான மகஜர் ஒன்றினையும் மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர்,வடக்கு ஆளுநர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு வழங்கவிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (6-8-30)

## ஐந்து கோடிக்கு புகையிலை கொள்வனவு

### தலைமறைவான நபர் கைது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த புகையிலைச் செய்கையாளர்களிடம் புகையிலையைக் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்து, 5 கோடி ரூபாவுக்கும் மேல் நிலுவை வைத்து விட்டுத் தலைமறைவான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அந்த நபர் தலைமறைவாக இருந்த போது வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக 14 முறைப்பாடுகள் தனித்தனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் சந்தேகநபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (6-8-33)

## மீசாலை பொதுநூலக பரிசளிப்பு நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலை பொது நூலகத்தினுடைய தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மீசாலை பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சீராளன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி விநோதா அச்சுதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் சர்வேந்திரனும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி ச.பவானி, மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலய அதிபர் திருமதி த.சுதாமதி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி ம.கஜேந்தினி, மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை அதிபர் க.இளங்கோவன், ஓய்வுநிலை நூலகர் திருமதி. தயாநிதி மற்றும் எழுத்தாளர் செ.சுதாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-8-33)



வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபை செயலகத்தின் கலாசார விழா- 2024 மாலிசந்திப் பிள்ளையார் ஆலய விழா மண்டபத்தில் உதவிப்பிரதேச செயலர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலைநிகழ்வுகளும் கலைஞர்களுக்கான விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

(படம்:-மகாலிங்கம்)



# தேசிய தலைமகனை வணங்குவோம்

**சேர்.பொன்.இராமநாதனின்
94 ஆவது குருபூசை தினம் இன்று**

இலங்கை வாழ் மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்து
வழிகாட்டிய தேசியத் தலைவன்
துலங்கு புகழ் படைத்த தூயோனை காலத்தால் அழியாத
சாதனைகள் படைத்த மகாபுருஷனை
இலங்கும் எழில் சிவபூமியாம் ஈழத்தாயின் தலைமகனை
இனமத பேதமற்ற பணியாளனை
கலங்கரை விளக்கான இராமநாத வள்ளலை
மனத்திருத்தி நன்றிப் பெருக்குடன் வணங்குவோம்

மருதனார்மடத்தில் சமாதிக்கோயில் கொண்ட ஞானியை
பெண்கல்வியில் மறுமலர்ச்சி தந்தானை
திருநெல்வேலியில் ஆண்களுக்காய் கட்டிய பரமேஸ்வராக்
கல்லூரி பல்கலையாய் மிளிரும் பெருமைக்குரியானை
தருமத்தின் வழி நின்று மனந்தளராத பணியால் கல்வி
கலை, ஞானம் மேலோங்கச் செய்த இராமநாத வள்ளலின்
குருபூசைத் தினத்தை சமாதிக்கோயிலில் அபிடேக, ஆராதனைகள்
செய்து நன்றியுடன் வழிபாடுகள் செய்கின்றோம்.

ஆக்கம்
பண்டிதை திருமதி வை.கணேசபிள்ளை,
பழைய மாணவர் சங்கம்,
யா/இராமநாதன் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கட்டடங்கள்

# குவியும் தகவல்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாணத்தில் வெள்ள வாய்க்கால்களை மறித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்தமையைத் தொடர்ந்து அதிகளவிலான தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன.**

அவற்றை உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி அவர்கள் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியிருக்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கடந்த மாதம் இடம்பெற்ற வெள்ள இடர் தடுப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்களப் பணியாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாவட்டச் செயலர்கள், கடந்த காலங்களை விட இம்முறை இடரின் போது உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பு அதிகளவில் இருந்ததாகக் குறிப்பிட்டனர்.

நாம் எவ்வாறான தயார்படுத்தல்களுடன் இருந்தாலும் இடர்கள் வரும்போது சில வேளைகளில் அவற்றைச் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்படும்.

சவால்களை நாம் சந்திக்கும் போதுதான் எமது சேவைகள் இன்னமும் மேம்படும். இந்த இடரிலிருந்து நாங்கள் கற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் எமது நடவடிக்கைகளை இப்போதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். நாம் அவற்றை மீளாய்வு செய்ய வேண்டும்.

சரியான தீர்மானங்களை விரைந்து எடுக்க வேண்டும். தலைமைத்துவத்துக்கு அதுதான் அழகு. விரைந்து தீர்மானங்களை எடுக்கத் தவறினால் பிரச்சினைகளுக்குத்தான் முகம்கொடுக்க வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் பருவகால மழைக்கு முன்னதாக வெள்ள வாய்க்கால்களை துப்புரவு செய்வதை எமது வருடாந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்குவதன் ஊடாக முன்னாயத்த நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுக்கலாம்.

இதேவேளை மத்தி, மாகாணம் என்று பாராது இவர்கள் எமது மக்கள் என்ற அடிப்படையில் இந்த இடர் நடவடிக்கையின் போது சகல திணைக்களங்களும் செயற்பட்டன. அது வரவேற்கப்பட வேண்டியதுடன் தொடரவேண்டும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் ஆகியோரும், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் கலந்துகொண்டனர். (நி-8-33)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(595)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

**077 839 3974**



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 6'<br>கி.பா: 65<br>தகைமை/தொழில்: BSc , MSc, Manager (London)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்<br>தொ.இ: B/14964 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரீடம்<br>கி.பா: 57<br>8 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி, Engineer<br>எதிர்பார்ப்பு:Engineer, Doctor, Accountant<br>தொ.இ: G/11319 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா:21½<br>12 இல் செவ்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc, Software Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14965 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/12110 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'4"<br>3 இல் சூரி செவ்<br>தகைமை/தொழில்: O/L, Salesman<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14967 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 36 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: BA, DO<br>எதிர்பார்ப்பு: தகுந்தவரன், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14185 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

### படவரைஞர்களைப் பதிவு செய்தல்-2025

வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் படவரைஞர் சேவையை மேற்கொள்ள விரும்பும் படவரைஞர்கள், மற்றும் 2024 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்டு புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு, உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 31.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவினை வேலைப்பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- NVQ-5 Drafting Technology (Buildings) கற்கைநெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழை சமர்ப்பித்து படவரைஞராக பதிவினை மேற்கொள்ளலாம்.
- மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைய கடந்த காலங்களில் பதிவினை மேற்கொண்டவர்கள் பதிவுகளைப் புதுப்பித்தல் கட்டாயமானதாகும்.
- பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் செயற்பட முடியாது.

**குறிப்பு:-**

❖ படவரைஞராக பதிவு செய்வதற்கான உரிமக் கட்டணம்- ரூபா 1000.000
❖ படவரைஞராக பதிவு செய்தல் கட்டணம் -ரூபா 5000.00
❖ புதுப்பித்தல் கட்டணம் -ரூபா 2000.00

**06.12.2024** (C-1726)


**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# உக்ரைனுக்கான உதவி ஒருபோதும் நிறுத்தப்படாது

### எக்ஸ் தளத்தில் பதிவிட்ட ஜேர்மன் பிரதமர்



(பெர்லின்)

ரஷ்யாவிற்கு எதிரான போரில்உக்ரைனுக்குத்தேவை யான அனைத்து ராணுவ உதவிகளும் செய்யப்படும் என ஜேர்மன் பிரதமர் ஓலாப் ஸ்கோல்ஸ் தெரிவித்துள் ளார்.

உக்ரைனுக்கு பயணம் மேற்கொண்ட ஜேர்மன் பிரதமர் ஸ்கோல்ஸ், உக் ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ் கியை சந்தித்துப் பேசினார்.

அப்போது ரஷ்யா போர், வடகொரியா ராணுவ வருகை, அமெரிக்காவின் நிலைப்பாடு உள்ளிட் டவை தொடர்பாக இருவ ரும் ஆலோசனை மேற் கொண்டனர்.


இந்தச் சந்திப்பு தொடர் பாக எக்ஸ் தளத்தில் பதி விட்டுள்ள ஸ்கோல்ஸ், "உக்ரைனுக்கு உதவு வதை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை என்றும் உக்ரைன் மக்களுடன் எப் போதும் ஜேர்மனி துணை நிற்கும்" எனவும் பதிவிட் டுள்ளார்.

அதேசமயம் "அமைதிப் பேச்சுவார்த்தையின் மூலமே போருக்கு தீர்வு காண முடி யும்" என்றும் ஸ்கோல்ஸ் உறுதிபடத் தெரிவித்துள் ளார். (நி-8)

# அரசியல் ெ

# கவிழ்ந்தது பி

## சிக்கலில் ெ



(பாரிஸ்)

**பிரான்ஸ் பிரதமர் ப மன்றத்தில் நம்பிக்கை கொண்டுவரப்பட்டது. மொத்தமுள்ள 577 உ பார்னியர் அரசுக்கு எ நம்பிக்கையில்லாத் தீரப பிரான்ஸ் அரசு கவிழ்ந்**

இதனைத் தொடர்ந்து 3 மாதங்களுக்கு முன்பு பிரத மராகப் பதவியேற்ற பார்னி யேர் தமது பிரதமர் பத வியை ராஜினாமா செய் தார்.

இதனையடுத்து ஜனா திபதி இமானுவேல் மெக் ரோனும் பதவி விலக வேண் டும் என எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ள னர்.

# ஹைதராபாத்தில் 'புஷ்பா 2' திரையிடல் நெரிசலில் தாய் உயிரிழப்பு, மகன் காயம்


(டில்லி)

ஹைதராபாத்தில் உள்ள திரையரங்கில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 'புஷ்பா 2: தி ரூல்' படத்தின் சிறப்புக் காட்சியைப் பார்க்கச் சென்ற 35 வயதுடைய பெண்ணொருவர் நெரி சலில் சிக்கி உயிரிழந்துள் ளார்.

மேலும் அவரது ஒன் பது வயதுடைய மகன் பல த்த காயமடைந்துள்ளதாக ஹைதராபாத் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் படத்தின் சிறப்புக் காட்சிக்காக வருகை தந்திருந்த தெலு ங்கு முன்னணி நடிகர் அல்லு அர்ஜுனைப் பார்க்க ஏராளமான மக்கள் கூட்டம் அலை மோதியமையினால் இந்த சம்பவம் இடம்பெற் றுள்ளது.

திரையிடலுக்கு இசை யமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத்துடன் வந்திருந்த நடிகரைக் காண ரசிகர்கள் குவிந்ததால் திரையரங் குக்கு வெளியே பரபரப்பு ஏற்பட்டது.




ஆயிரக்கணக்கான ரசி கர்கள் திரண்டனர். ஒரு கட்டத்தில் கூட்டத்தை சமா ளிக்க முடியாமல் போன நிலையில் பொலிஸார் அடி, தடி தாக்குதல் நடத்திய தால் பயங்கர நெரிசல் மற்றும் தள்ளுமுள்ளு ஏற் பட்டது.

இந்த நெரிசலில் சிக்கி ரேவதி என்ற 35 வயதுப் பெண் பரிதாபமாக உயிரி ழந்தார்.

அத்துடன் அவரது மகன் உள்ளிட்ட 2 பேர் காய மடைந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

சம்பந்தப்பட்ட திரை யரங்க நிர்வாகம் மீது வழக்கு தொடரப்பட்டு விசா ரணை நடைபெற்று வருகி றது. (நி-8)

# 2100 ஆண்டுக

# பழைமையான கோ

### தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்



(கெய்ரோ)

2100 ஆண்டுகள் பழைமையான கோயில் எகிப்தில் தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லக்சோர் என்ற நகரத்தின் வடக்குப் பகுதியில் 125 கி.மீ., தொலைவில் உள்ள அத்ரிபிஸ் என்ற பகுதியில் மலைக்குன்றின் அருகே இந்த எகிப்து பாரம்பரியக் கோயில் மண்ணில் புதைந்துள்ளது தெரிய வந்தது.

இந்த கோயிலில் சிங்கத்தலை கொண்ட தெய்வம் மற்றும் கி.மு. 170 ஆம் ஆண்டு கால 8 ஆவது மன்னர் டோலமி சிலைக ளும் உள்ளன. கர்ப்பம் கு தல் தெய்வங்கள் இருந்தத 2100 ஆண்டுகள் பழைமை கட்டடத்தின் பெயர் இன் வில்லை. நுழைவு வாயிலி காணப்படு கின்றன.

மொத்தம் 4 விமானங் இதில் கூடுதல் அறைக ஒவ்வாரு அடுக்கிற்கும் செல் கள் உள்ளது. பழங்கால கோ பில் தொடர்ந்து ஆராய்ச்சிகள் ன்றன என ஜேர்மனியில் உ பல்கலைக்கழகம் தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி

# பிரான்ஸ் அரசு

## மெக்ரோன்




**ர் பார்னியர் மீது பாராளு**
**பிக்கையில்லாத் தீர்மானம்**
**து. இந்தத் தீர்மானத்தில்**
**உறுப்பினர்களில் 331 பேர்**
**த எதிராக வாக்களித்தனர்.**
**தீர்மானம் வெற்றி பெற்றதால்**
**விழ்ந்தது.**

ன்
ள்
ள

சமூகப் பாதுகாப்பு நிதி மசோதாவை சிறப்பு அதிகாரம் மூலம் ஜனாதிபதி மெக்ரோன் நிறைவேற்ற முயன்றதால் அரசு கவிழ்க்கப்பட்டது.

பிரான்ஸ் வரலாற்றில் கடந்த 60 ஆண்டுகளில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் பிரான்ஸ் அரசாங்கம் கவிழ்க்கப்படுவது இதுவே முதல்முறையாகும். (நி-8)



# பெண்கள் மருத்துவம் படிக்க ஆப்கானில் தடை

## கண்டனம் வெளியிட்ட கிரிக்கெட் வீரர்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். அதன்பின் நல்லொழுக்கத்தைப் பரப்புவதற்கும் தீமைகளைத் தடுப்பதற்கும் அமைச்சகம் ஒன்றை அமைத்தனர்.

அப்போது முதல் தலிபான்கள் பிறப்பித்த ஆணைகளை அமைச்சகம் செயற்படுத்தி வருகிறது.

இவை அனைத்தும் பெண்களைச் சமமற்ற முறையில் நடத்தும் வகையில் அமைந்துள்ளன. பெண்கள் சிறுமிகளுக்கு ஆடைக் கட்டுப்பாடுகள், கல்வி கற்க, வேலைக்குச் செல்லத் தடை, பொது இடங்களுக்கு ஆண்களின் துணை இல்லாமல் செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

மேலும் அண்மையில் ஆப்கானிஸ்தானில் நர்சிங் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளை பெண்கள் பயில தலிபான் அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில் தலிபான் அரசின் இந்தத் தடை உத்தரவிற்கு அந்நாட்டு கிரிக்கெட் வீரர் ரஷித் கான் வருத்தம் தெரிவித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில் கற்றலின் முக்கியத்துவத்தை குர் ஆன் வலியுறுத்துகிறது. ஆப்கானிஸ்தானில் பெண் களுக்கான கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்கள் அண்மையில் மூடப்பட்டதை நான் ஆழ்ந்த வருத்தத்துடனும் ஏமாற்றத்துடனும் நினைத்துப் பார்க்கிறேன். இந்த முடிவு பெண் களின் எதிர்காலத்தை மட்டுமல்ல நமது சமூகத்தின் கட்டமைப்பையும் ஆழமாக பாதித்துள்ளது.

நமது அன்புக்குரிய தாயகமான ஆப்கானிஸ்தான் ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கிறது. ஒவ்வொரு துறையிலும் குறிப்பாக மருத்துவத் துறையில் வல்லுநர்கள் நம் நாட்டுக்கு அதிகம் தேவை.

பெண் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் கடுமையான பற்றாக் குறை பெண் களின் உடல் நலம் மற்றும் கண்ணியத்தை நேரடியாகப் பாதிக்கிறது.

ஆதலால் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு நான் மனப்பூர்வமாக வேண்டுகோள் விடுக்கிறேன். இதனால் ஆப்கானிஸ்தான் பெண்கள் தங்கள் கல்வி உரிமையை மீட்டெடுக்கவும் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கவும் முடியும்.

அனைவருக்கும் கல்வியை வழங்குவது ஒரு சமூகப் பொறுப்பு மட்டுமல்ல அது நமது தார்மீகக் கடமை எனவும் தெரிவித்தார். (நி-8)

# ...கள்

## ...ாயில்

### ...ண்டுபிடிப்பு



...பம் குறித்து வேண்டு
...ருந்ததாக தெரிகிறது.
...ழமையான இந்தக்
...ர் இன்னும் தெரிய
...வாயிலில் கோபுரங்கள்

...மானங்கள் உள்ளன.
...அறைகள் இருந்தன.
...ம் செல்ல ஏதுவாக வழி
...ால கோயில் கண்டுபிடிப்
...ய்ச்சிகள் நடந்து வருகி
...ரியில் உள்ள டூபிங்கன்
...தரிவித்துள்ளது. (நி-8)



# பிட்காயின் மதிப்பு புதிய மைல்கல்லை தொட்டது

(நியூயோர்க்)

ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். அவர் ஜனவரி 20 ஆம் திகதி 47ஆவது ஜனாதிபதியாகப் பதவி ஏற்கிறார். அவர் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்க இருப்பது இது 2ஆவது முறையாகும்.

இந்த நிலையில் ட்ரம்ப் வெற்றியைத் தொடர்ந்து அமெரிக்க பங்குச்சந்தைகள் உயர்ந்ததால் தங்கம், வெள்ளி விலையிலும் மாற்றம் ஏற்பட்டது. அத்தனையையும் விட கவனம் பெற்றது கிரிப்டோகரன்சியின் விலை உயர்வு.

அந்தவகையில், உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பிரபலமான கிரிப்டோகரன்சியான பிட்காயின் மதிப்பு அதிகரித்துள்ளது. சமீபத்தில் 97,594.85 அமெரிக்க டொலர் என்று இருந்தது. விரைவில் 1 லட்சம் டொலரை தொடும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில் பிட்காயின் மதிப்பு 1 லட்சம் டொலரை நேற்று தொட்டது. இந்திய ரூபாயின் மதிப்புப்படி 85 லட்சத்தை தொட்டது. இது எட்டியுள்ள புதிய உச்சம் கிரிப்டோ கரன்சி சந்தையில் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

முதல் முறையாக 1 லட்சம் அமெரிக்க டொலரை தொட்டது. பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தின் தலைவராக பால் அட்கின்சை நியமித்து ட்ரம்ப் உத்தரவிட்டார். இந்த நியமனத்துக்கு பிறகு தான் பிட்காயின் மதிப்பு புதிய மைல்கல்லை தொட்டது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்ற 4 வாரத்தில் கிரிப்டோ கரன்சி 45 சதவீதம் அதிகரித்துள்ளது. தேர்தல் நாளில் கிரிப்டோ கரன்சி 69,374 அமெரிக்க டொலராக இருந்தது. தற்போது 1,01,512 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AI உடன் எதிர்காலமா...?

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

அருவி போன்று ஆவலுடன் முன்னேறி வரும் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவியல் (Artificial Intelligence - AI) என்பது மிக முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. மனிதர்களின் சிந்தனைத் திறனை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இந்த நுண்ணறிவுத் தொழில் நுட்பம் நம் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஓர் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.


இது இப்போது நம் வாழ்க்கையில் பல விதங்களில் தங்கியுள்ளதே அன்றி எதிர்காலத்தின் அடையாளமாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. உலகம் முழுக்க பல்வேறு துறைகளில் AI நம்மை வழிநடத்திக் கொண்டு செல்கிறது.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் 1818 இல் Mary Shelly என்ற எழுத்தாளர் பிராங்கைஸ்டெயின் (Frankestein) என்ற ஒரு நாவலை எழுதினார். விக்டர் பிராங்கைஸ்டெயின் என்ற ஒரு இளம் விஞ்ஞானி பிணங்களின் உறுப்புகளை பயன்படுத்தி ஒரு ஆய்வகத்தில் செயற்கை மனிதன் ஒருவனை உருவாக்குகிறார்.

ஆரம்பத்தில் அன்பும் பாசமும் நிறைந்தவனாக இருக்கும் இந்த செயற்கை மனிதன், அசுரன் (monster) அல்லது சாத்தானாக மாறி பல பேரைக் கொல்வதோடு, இறுதியில் தன்னை உருவாக்கிய விஞ்ஞானியையே கொன்று விடுகிறான். இந்தக் கதையை அடிப்படையாக வைத்து எண்ணற்ற திரைப்படங்கள் 1910 தொடக்கம் பல மொழிகளில் தயாரிக்கப்பட்டு வெற்றிபெற்றன. இந்தக் கதை சொல்லவரும் செய்தி என்ன வென்றால் 'மனிதனின் நுண் ணறிவே அவனுக்கு எதிரியாக மாறலாம்' என்பது தான்.

நம் அன்றாட வாழ்க்கையில் AI இன் தாக்கம் அதிகரித்துள்ளது. இன்று ஸ்மார்ட் போன்களில் உள்ள குரல் உதவியாளர்கள் (Voice Assistants) எளிதாகவே நமக்குப் பயன்படுகின்றன. உதார ணமாக, "சிரி," "அலெக்ஸா" போன்ற குரல் உதவியாளர்கள் நமக்குத் தேவையான தகவல்களைத் தருவதோடு மட்டுமல்லாமல் நாட்காட்டி, வானிலை, சுற்றுப்புறத் தவல்கள் போன்றவற்றையும் துல்லியமாக வழங்குகின்றன. அவை நம்மை அறிந்து கொண்டு நாம் விரும்பும் செயல்களை முன்கூட்டியே அறிவித்து செயற்படுகின்றன.

இது ஒரு சிறிய தொடக்கம் மட்டுமே. நம் வீடுகளில் இருக்கும் ஆட்டோமேஸன் (Automation) சாதனங்கள், ஸ்மார்ட் தானியங்கி சாதனங்கள், நம் வாழ்வை எளிதாக்குகின்றன. இந்தச் சாதனங்கள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டு, AI கொண்டு கட்டுப்படுத்தப் படுகின்றன. டிவி, லைட்கள், போன்றவை, முக



அடையாளம் மூலம் கட்டுப்படுத்தும் அளவுக்கு நுண்ணறிவு கொண்ட சாதனங்களாக மாறியுள்ளன.

மனித உடல் என்பது ஒரு biological system. AI என்பது ஒரு digital system. இந்த Digital system இலுள்ள பெரிய வித்தியாசம் என்னவென்றால் ஒரு செயற்கை நுண்ணறிவுடன் கூடிய ஒரு digital system ஒன்றை உருவாக்கினால் அதைப்போல் ஆயிரக்கணக்கான பிரதிகளை நொடியில் தயாரிக்கமுடியும்.

ஆனால் அதியுயர் நுண்ணறிவு கொண்ட மனிதனைப் பிரதியெடுக்க முடியாது. செயற்கை நுண்ணறிவுடன் கொண்ட ஒரு robot ஐ தயாரித்தால் பத்தாயிரம் robotsகளை தயாரிக்கலாம். ஒரு robot, AI மூலமாக பெறும் கற்றல் அல்லது தரவுகள் 10 000 robotகளுக்கு நொடியில் கடத்தப்படும்.

செயற்கை நுண்ணறிவு என்று பார்க்கும்போது, neural networks (மனித மூளை மற்றும் நரம்பியல் தொகுதியைப் போல ஒரு தொகுதியை உருவாக்குவது) என்பது கற்றல் மற்றும் தகவல்களை அலசுதல் என்பதில் மனித மூளைக்கு ஓரளவு நிகரான தாகும்.

Learn from experience - அனுபத்தின் மூலம் கற்றலை எப்படி மனித மூளை செய்கிறதோ அதே போல neural networks ஆல் அனுபவத்தின் மூலம் கற்க முடியும். இது deep learning என்று அழைக்கப்படுகிறது. மனித மூளை சேகரிக்கக் கூடிய அல்லது செயன்முறை செய்யக் கூடிய தரவுகளை விட மிக அதிக மான தரவுகளை சேகரிக்கக்கூடிய அல்லது செயன்முறை செய்யக் கூடிய நிலையைச் செயற்கை நுண்ணறிவு வெகு விரைவில் எட்டிவிடும். ஆனால் இது பிழையான நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவது பேராபத்தைத் தோற்றுவிக்கும்.

மருத்துவத் துறையில் AI ஒரு பரிமாண மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் திறன், மருத்துவர்களின் வேலை வாய்ப்பை மாற்றி அமைத்துள்ளது. ரோபோ சத்திரசிகிச்சை (robotic surgery) தற்போது சிறந்த அளவிலான அறுவை சிகிச்சைகளை AI மூலமாக மேற்கொள்கிறது. நோயாளியின் உடல்நிலை மற்றும் சிகிச்சை முறைகளை துல்லியமாக கணிக்கின்ற கணினி மொழியாற்றல், மருத்துவத் துறையை ஒரு புதிய கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளன.

உலகெங்கும் கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் AI பயன்படுத்தி பல்வேறு மருந்துகளும் தடுப்பூசிகளும் விரைவில் கண்டு பிடிக்கப்பட்டன. கூடவே தொற்றுநோயின் பரவலை கணிப்பது, அதன் தாக்கத்தை ஒட்டிய பல தரவுகளை அணுகுவது போன்ற செயற்பாடுகள் AIஇன் துணையுடன் மேற்கொள்ளப்பட்டன.

AI மனிதர்கள் மட்டுமல்ல, மின்கோப்புகளை மதிப்பீடு செய்து சிக்கல்களைத் தீர்க்கும் திறனுடன் விளையாட்டுத் துறையிலும் செயற்படுகிறது. விளையாட்டுப் போட்டிகளில் வீரர்களின் செயற்றிறனை மேம்படுத்தி அவர்களின் செயல்களை பகுப்பாய்வு செய்து செயற்திட்டங்களை முன்மொழிகிறது. கூடவே கலைத்துறையிலும் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில், பாடல்கள், ஓவியங்கள், பிம்பங்கள் போன்றவை உருவாக்கப்படுகின்றன.

AI கையாளப்படும் பல துறைகளில் இது வேலைவாய்ப்புக்களை யும் மாற்றியமைக்கின்றது. சிலரின் வேலைகளைத் தவிர்க்கும் என்ற சாத்தியம் இருப்பதால் மக்கள் வேலைவாய்ப்பில் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்ற அச்சம் நிலவு கிறது. இருப்பினும் AI புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதன் மூலம் பல வேலை வாய்ப்புகளையும் உருவாக்கி வருகின்றது. தொழில்நுட்பம் நமது வாழ்க்கை முறைகளில் நெருக்கமாக இணைந்து, வேலையில் இருந்த சிக்கல்களை மாற்றி அமைக்கின்றது. எனவே, மக்கள் AI கற்றுக் கொண்டு அதன் பலனைப் பெறத் தயாராக இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் AI மிகச் சிறந்த தொழில்நுட்பமாக வளர்ந்தாலும் அதன் வளர்ச்சியில் மனித நேயத்தை காப்பது அவசியம். AI குறுக்குவிடாமல் மனிதர்கள் எடுக்கும் முடிவுகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். பல்வேறு துறைகளில் நம்பத்தகுந்த மற்றும் நியாயமான செயற்பாடுகளை AI முன்மொழிகிறது. இதன் மூலம் தொழில் நுட்பம் மனித நலன்களுக்கு சேவை செய்யவேண்டும் என்பதற்கு நம்மால் வழி வகுக்க முடியும்.

AI என்பது நிச்சயமாக எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மிகப் பெரிய மாற்றம். இது நமது வாழ்வை எளிதாக்குவதோடு மட்டுமல்ல, தொழில்முறைகளையும் சமூகத் தையும் சிறப்பாக மாற்றி வருகிறது. எதிர்காலத்தில் பல தொழில்நுட்ப மாற்றங்களை உருவாக்கும் AI நம் வாழ்வின் முக்கிய பகுதியான மனித நேயத்தை உடனோடும் பக்கபலமாய் வளர்க்கும் ஒரு நுண்ணறிவு சாதனமாகவே செயற்பட வேண்டும்.

எதிர்கால AI ஆனது தொழில் நுட்ப உல கில் ஒரு புரட்சியாகவும் மனித குலத்திற்கு எதிர்காலத்தை உரு வாக்கும் ஒரு மிகச்சிறந்த கண்டு பிடிப்பாகவும் விளங்கும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

காலிங்கராசா ஹரிச்சந்திரா,
தொழில்நுட்ப அலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானத் துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி ஸ்கந்தபுரம் சந்தை, ஆனைவிழுந்தான்குளம் சந்தை மற்றும் ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளினை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 06.12.2024 தொடக்கம் 19.12.2024 ஆம் திகதி வரை (அலுவலக நாட்களில் மு.ப 9.00 - பி.ப 01.00 வரை)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி:- 20.12.2024 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 20.12.2024 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கரைச்சி பிரதேசசபை, தலைமை அலுவலகம்,

**ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 01 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 02 | கடை இல 02 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 03 | கடை இல 04 | 2,000.00 | 1,000.00 | 2,000.00 | 240,000.00 |
| 04 | கடை இல 05 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 05 | கடை இல 06 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 06 | கடை இல 07 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |

**ஆனைவிழுந்தான்குளம் கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 01 | 3,350.00 | 1,000.00 | 10,000.00 | 804,000.00 |
| 02 | கடை இல 02 | 3,350.00 | 1,000.00 | 10,000.00 | 804,000.00 |

**ஸ்கந்தபுரம் கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 33 | 4,000.00 | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 02 | கடை இல 34 | 4,000.00 | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 03 | கடை இல 35 | 5,000.00 | 1,000.00 | 12,000.00 | 1,200,000.00 |
| 04 | கடை இல 36 | 5,000.00 | 1,000.00 | 12,000.00 | 1,200,000.00 |

**நிபந்தனைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் வதிவிடம் மற்றும் ஆள் அடையாளம் ஆகியவற்றை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப்பிரதி என்பவற்றுடன் நேரடியாக கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சிக்கு சமூகமளித்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 20.12.2024 ஆம் திகதி முற்பகல் **10.00 மணிக்கு** முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு **20.12.2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமைவாக கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு

08. சித்திகர கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

09. சித்திகரக் குத்தகைதாரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்று மாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகவும் செலுத்துதல் வேண்டும்.

10. மாதாந்த வாடகைப்பணத்தினை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்தல் வேண்டும் தவறின் கட்டுப்பணத்தின் 10% தண்டப்பணம் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

11. முற்குறிப்பிட்ட 8, 9, 10 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

12. குத்தகை உடன்படிக்கையாளர் ஒருவர் தனது பெயரில் ஒரு கடைக்கு மாத்திரமே வாடகை ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முடியும்.

13. கடையை வாடகைக்கு எடுப்பவரினாலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன்,மகள்).

14. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

15. தெரிவுசெய்யப்படாத கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

16. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

17. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.

18. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணம்/வரியினை வருடாந்தம் செலுத்தி உரிமச்சான்றிதழ் / வரிச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

19. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் செயலாளரிற்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

20. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு.செ.செல்வகுமார்,**
**திகதி :- 06/12/2024**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

(சி-1728)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 649





அது என்ன விடயம்? இரகசியம் ஒன்றுமில்லையே? "இரகசியம் என்ன? பிரம்மாவைத் தண்டித்ததுபோல் என்னையும் தண்டிப்பதாயிருந்தால் குறைந்த பட்சம், பதினாயிரம் தலையாவது எனக்கு இருந்தால்தான் சரிக்கட்டி வரும்! அதை எண்ணித்தான் சிரித்தேன்."

"அத்தனை பொய்கள் சொல்லியிருக்கிறாயாக்கும்!" ஆம் சோதிடரே! அது என் ஜாதக விசேடம் போலிருக்கிறது. பொன்னியின் செல்வரைச் சந்தித்த பிறகு உண்மையே சொல்வதென்று தீர்மானித்திருந்தேன். ஒரு தடவை ஒரு முக்கியமான உண்மையையும் சொன்னேன். அதைக் கேட்டவர்கள் நகைத்தார்கள் ஒருவரும் நம்பவில்லை!"

"ஆம் தம்பி! காலம் அப்படிக் கெட்டுப் போய்விட்டது. இந்த நாளில் பொய்யையே ஜனங்கள் நம்புவதில்லை. உண்மையை எப்படி நம்பப் போகிறார்கள்?"

"உம்முடைய ஜோதிடத்தின் கதியும் அப்படித் தானாக்கும்! சோதிடரே! இளவரசர் அருள்மொழிவர்மரைப் பற்றி நீர் கூறியது நினைவிருக்கிறதா! வானத்திலே வடதிசை அடிவாரத்தில் நிலைத்து நின்று ஒளிரும் துருவ நட்சத்திரம் போன்றவர் பொன்னியின் செல்வர் என்று நீர் சொல்லவில்லையா?"

"சொன்னேன் அதனால் என்ன?" அவரைப் பற்றிய செய்தியை நீர் கேள்விப் படவில்லையா?"

"கேள்விப்படாமல் எப்படி இருக்க முடியும்? நாடு நகரமெல்லாம் அதே பேச்சாகத்தானே இருக்கிறது? துருவ நட்சத்திரம் கடலில் மூழ்கிவிட்டதென்று நீர் கேள்விப்பட்டதுண்டா?

"துருவ நட்சத்திரம் கடலில் மூழ்காது. ஆனால் அந்த நிலைகுலையா நட்சத்திரத்தையும் மேகங்கள் சில சமயம் மறைக்கலாம் அல்லவா? இன்றைக்குக்கூட வட திசையில் மேகங்கள் குமுறுகின்றன. இன்று இரவு நீ எவ்வளவு முயன்றாலும் துருவ நட்சத்திரத்தைக் காணமுடியாது. அதனால் அந்த நட்சத்திரம் இல்லாமற் போய்விடுமா?"

"அப்படியா சொல்கிறீர்? பொன்னியின் செல்வரைப் பற்றிய உண்மையான செய்தி ஏதாவது உமக்குத் தெரியுமா?"


"எனக்கு எப்படித் தெரியும்? நீதான் அவருடன் கடைசியாகக் கடலில் குதித்தாய் என்று பேச்சாயிருக்கிறது. தெரிந்திருந்தால் உனக்கு அல்லவா தெரிந்திருக்கவேண்டும். உன்னைக் கேட்கலாம் என்று எண்ணியிருந்தேன்." வந்தியத்தேவன் பேச்சை மாற்ற விரும்பி "சோதிடரே! வால் நட்சத்திரம் எப்படி இருக்கிறது?" என்று வினவினான்.

"மிகமிக நீளமாகப் பின்னிரவு நேரங்களில் தெரிகிறது. இனிமேல் நீளம் குறைய வேண்டியதுதான்.

தூமகேதுவினால் விபத்து ஏதேனும் ஏற்படுவதாயிருந்தால் அதி சீக்கிரத்தில் அது ஏற்பட்டாக வேண்டும். கடவுளே! இராஜ குலத்தில் யாருக்கு என்ன நேரிடுமோ என்னமோ!" என்றார் சோதிடர்.


வந்தியத்தேவனுடைய உள்ளம் அதிவேகமாக அங்குமிங்கும் பாய்ந்தது. தஞ்சையில் பாரிச வாயு பீடித்துப் படுத்த படுக்கையாயிருக்கும் சுந்தர சோழரும், நாகைப் பட்டினத்தில் நடுக்கு சுரம் வந்து கிடக்கும் பொன்னியின் செல்வரும், கடம்பூர் மாளிகையில் நந்தினியைச் சந்திக்கப் போகும் ஆதித்த கரிகாலரும், இராஜ்யத்துக்கு ஆசைப்பட்டு மக்களின் கோபத்துக்குப் பாத்திரமாகியிருக்கும் மதுராந்தகரும், கையில் கொலை வாளை வைத்துக்கொண்டு கொஞ்சும் நந்தினியும் அவனுடைய உள்ளத்தில் வரிசையாகப் பவனி வந்தார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மயிலும் வான்கோழியும்



காட்டில் இருந்த பறவைகள் எல்லாம் ஒரு பெரிய மாநாடு கூட்டின. அந்த மாநாட்டுக்கு எல்லாப் பறவைகளும் வந்திருந்தன. பறவைகள் முன்னேற்றத்தைக் குறித்துப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு முடிவில் ஒருநடன அரங்கேற்றம் ஏற்பாடாகியிருந்தது. திட்டப்படி கடைசியில் மாநாட்டு மேடையின் மீது ஏறி மயில் நடனம் ஆடியது. நீலப் புள்ளிகள் நிறைந்த அழகிய பச்சைத் தோகையை விரித்து மயில் ஆடிய நடனம் பார்க்கப் பார்க்க இன்பமளிக்கும் காட்சியாக இருந்தது. பறவைகள் மயிலை மிகவும் பாராட்டின.

அதன் அற்புதமான நடனத் திறனைக் குறித்து அவையில் புகழ்ந்து பேசின. பல பரிசுகளும் மாநாட்டின் சார்பில் மயிலுக்கு வழங்கப் பெற்றன. இவற்றையெல்லாம் ஒரு வான்கோழி பார்த்துக் கொண்டிருந்தது. மாநாட்டுத் தலைவரிடம் போய் "நானும் நடன அரங்கேற்றம் நடத்த அனுமதி கொடுங்கள் என்று கேட்டது.

"நீயா" என்று வியப்புடன் கேட்டது மாநாட்டுத் தலைவராக இருந்த பருந்து.

"ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? என்னையும் ஆடவிட்டுப் பாருங்கள். வாய்ப்புக் கொடுத்தால் தானே திறமை இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ளலாம்? என்று அடித்துப் பேசியது வான் கோழி.

மாநாட்டுத் தலைவர் பருந்து, அனுமதி கொடுத்து விட்டது.

வான்கோழி மேடையின் மீது ஏறியது. வால் போல் நீண்டிருந்த தன் சிறகுகளை விரித்துக் கொண்டு, அது நடனம் ஆடியது வேடிக்கையாக இருந்தது.

எல்லாப் பறவைகளும் கேலி செய்து சிரித்தன. அவமானம் தாங்க முடியாமல் வான்கோழி மேடையை விட்டு இறங்கி ஓடி விட்டது.

கருத்துரை :- மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி தானும் அதுபோல் ஆடமுடியும் என்று கருதியது தவறு. கல்வி இல்லாதவர்கள் கவிதை எழுத முயல்வது வான் கோழியின் செயல் போன்றது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் இருக்கும் பண்புகள் தான் வெளியுலகில் எனக்குக் கிடைக்கும் மரியாதைக்கு ஆதாரம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதிய அரசியலமைப்பு எப்படி அமையப் போகிறது?

ஒரு மொழி என்றால் இரண்டு நாடு. இரண்டு மொழி என்றால் ஒரு நாடு என கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றி னார்.

தனிச்சிங்களச் சட்டத்தை அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்கள் கொண்டு வந்தபோதே மேற்போந்த கருத்தை கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா கூறியிருந்தார்.

அதாவது, இலங்கைத் திருநாட்டில் சிங் களம் மட்டும்தான் அரச கரும மொழி என் றால், இலங்கை பிரிந்து இரண்டு நாடாகும்.

மாறாக, இலங்கையில் சிங்களமும் தமி ழும் ஆட்சி மொழி என்றால், இலங்கை ஒரு நாடாக இருக்கும் என்பது கொல்வின் கூறிய கருத்து.

எனினும் 1972ஆம் ஆண்டு இலங்கை யின் அரசியலமைப்பைத் தயாரிக்கும் பொறுப்பு கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆயினும் அரசியலமைப்பில் சிறுபான் மைத் தமிழ் மக்களின் உரிமையைப் பாது காக்கின்ற – தமிழ் மக்களின் தாய்மொழி யாகிய தமிழுக்கு சம உரிமை வழங்குகின்ற நினைப்பு எதுவும் கொல்வின் ஆர். டி சில்வா விடம் அப்போது இல்லாமல் போயிற்று.

ஆக, 1958களில் ஒரு மொழி என்றால் இரண்டு நாடு. இரண்டு மொழி என்றால் ஒரு நாடு எனக் கூறிய கொல்வின், 1972இல் இலங்கை தனித்து பௌத்த சிங்கள நாடாக இருப்பதற்கு ஏற்றதான அரசியலமைப்பை உருவாக்கினார்.

ஆக, நம் நாட்டின் நிலைமை இதுவாகவே இருக்கிறது. அதாவது, தேர்தலில் வெற்றி பெறாத வரையில் – ஆட்சிப் பீடத்தைக் கைப் பற்றாதவரையில் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க வேண்டும் எனக் கூறுகின்ற சிங் களக் கட்சிகள்; ஆட்சிப்பீடமேறி விட்டால், அவ்வளவுதான்.

30 ஆண்டு கால இனப் பிரச்சினையை மூன்று ஆண்டுகளில் தீர்த்து வைக்க முடியும் என நினைத்து விடாதீர்கள் என்பர்.

இதற்கும் மேலாக, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு என்றெல்லாம் மிகச் சிறந்த அரசியல் நாடகங்கள் இலங்கை அரங்கில் காட்சியிடப்படும்.

ஈற்றில் எல்லாமும் அம்போ என்றாகிவிட, மீண்டும் தேர்தல். அதில் புதிய ஆட்சி. பிற கென்ன எங்கள் தொடர்பான எல்லாமும் அப்படியே கால ஓட்டத்தில் கடந்து செல்லும்.

இப்போது புதிய அரசாங்கம். ஆம், ஜனாதி பதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங் கம். அதில் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு புதிய அரசியலமைப்பு என்ற நாடகம் திரை யிடப்படவிருக்கிறது.

நாமும் புதிய அரசியலமைப்புக்காகக் காத் திருப்போம். எங்கள் அரசியல்வாதிகளின் காலமும் புதிய அரசியலமைப்பு என்பதனூடு கடந்து போகும்.

ஈற்றில் புதிய அரசியலமைப்பிலும் எங்க ளுக்கு ஒன்றும் இல்லை என்ற புராணம் இசைக்கப்படும்.

அப்போது நம்மவர்களும் நாடு கடந்து, வேறு தேசம் சென்று தமிழையும் மறந்து தமிழினத்தையும் மறந்து செல்வர்.

### மாவீரர் தினம் தொடர்பில் பொய்ப் பிரசாரம்

# மொட்டின் நிர்வாகச் செயலாளர் கைதாகி பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

மாவீரர் நாள் அனுஸ் டிக்கப்படுகின்றமை தொடர் பில் சமூக வலைத்தளங்க ளில் பொய்ப்பிரசாரம் செய்த குற்றச்சாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளரான ரேணுக பெரேரா, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று (5) காலை கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று நேற்றுக் காலை அவரின் வீட்டுக்குச் சென்று வாக்குமூல மொன்றை பெற்றதன் பின் னர் வாக்குமூலத்தின் அடிப் படையில் அவரைக் கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட ரேணுக பெரே ராவை பிணையில் செல்ல கொழும்பு நீதவான் நீதி மன்றம் அனுமதி வழங் கியுள்ளது. (ம-7)

### தொழிற்சாலையில் உணவு ஒவ்வாமை

# 50 பணியாளர்கள் வைத்தியசாலையில் அனுமதி

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் சேவையாற்றும் சுமார் 50 பணியாளர்கள் உணவு ஒவ்வாமை கார ணமாக நீர்கொழும்பு வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற் சாலையில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட பணியாளர்களிடையே மயக்கம், வாந்தி உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து 50 இற்கும் மேற் பட்ட பணியாளர்கள் வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர்.

இந்த உணவு ஒவ் வாமை தொடர்பில் நீர் கொழும்பு பொலிஸார் சீதுவை சுகாதார வைத் திய அதிகாரி காரியாலயம், பொதுச் சுகாதார பரிசோத கர்கள் இணைந்து விசார ணைகளை ஆரம்பித்துள் ளனர். (ம-7)

# முச்சக்கரவண்டி விபத்து ஒருவர் பலி; மூவர் காயம்

வாழைச்சேனை - மியான்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

பொலநறுவையிலிரு ந்து நாவலடி நோக்கிப் பயணித்த முச்சக்கர வண் டியும், நாவலடிப் பகுதியிலி ருந்து பயணித்த முச்சக்கர வண்டியும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள் ளது.

இதன்போது ஒருவர் உயிரிழந்ததுடன் முச்சக் கரவண்டியின் சாரதி, அதில் பயணித்த பெண் மற்றும் 13 வயதுடைய சிறுவன் ஒருவரும் காய மடைந்துள்ளனர்.

அத்துடன், குறித்த வாகன விபத்தில் காயம டைந்த 3 பேரும் வாழைச் சேனை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின் னர் மேலதிக சிகிச்சை களுக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலு வலகம் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-7)

# மதில் வீழ்ந்து ஒருவர் மரணம்

(கொழும்பு)

பாராளுமன்ற வீதியில் வீடொன்றைச் சுற்றி கட்டப் பட்டிருந்த மதிலின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் பண்டாரகம - ரைகம, பிர தேசத்தைச் சேர்ந்த ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது ஸ்ரீ ஜயவர்தனபுர, பாராளு மன்ற வீதியில், கும்புக்க ஹுதுவ பகுதியில் உள்ள வீடொன்றின் மதிலில் இருந்த பழைய இரும்பு வேலியை குறித்த நபரும் அவரது மகனும் அகற்றிய பின்னர் புதிய வேலியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போது மகன் கடை ஒன்றிற்குச் சென்றி ருந்த நிலையில் மதிலின் மீதமிருந்த பகுதியை தந்தை அகற்றும் நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த வேளை சுவர் இடிந்து விழுந்ததுடன், குறித்த நபர் அதன் அடியில் சிக்கியதாக வும் இதனால் மரணம் ஏற் பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (ம-7)

# கிளிநொச்சியில் புதிய தொழிற்கற்கைகள் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்டத் தில் இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையி னால் புதிய தொழில் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

அதன்பிரகாரம் கரை ச்சிப் பிரதேசத்தில் அழகுக் கலை (NVQ IV), கணனி வன்பொருள் (NVQ IV), கணனி வடிவமைப்பு (NVQ IV). ஆடைவடிவ மைப்பு (NVQ IV), கணினி தகவல் தொடர்பாடல் (NVQ IV), அலுமினியம் கட்டுமானம் (NVQ IV) ஆகிய கற்கை நெறிகளும் பளைப் பிரதேசத்தில் கணினி தகவல் தொடர் பாடல் (NVQ IV), வீட்டு மின்னிணைப்பு (NVQ III) ஆகிய கற்கை நெறிகளும் கண்டாவளைப் பிரதேசத் தில் ஆடைவடிவமைப்பு (NVQ IV), ஆட்டோ மற் றும் மோட்டார் சைக்கிள் திருத்துனர் (NVQ IV) ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளது என இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கிளி நொச்சி வளாகத்தின் உத வியப்பணிப்பாளர் தெரிவித் துள்ளார். (ம-7)

# தொழிற்பயிற்சி விரிவுரையாளர் விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

இலங்கை தொழிற்பயி ற்சி அதிகாரசபையின் கிளி நொச்சி மாவட்ட வளாகத் தில் தொழிற்பயிற்சி விரி வுரையாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவும் நிலையில் அப் பதவிகளுக் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்பிரகாரம் மோட் டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ திருத்துனர், குடி சார் படவரைஞர் (Drafts man), வளிசீராக்கலும் குளி ரூட்டலும் மற்றும் அலுமி னியக் கட்டுமானம் போன்ற கற்கை நெறிகளுக்கான தொழிற்பயிற்சி விரிவுரை யாளர் வெற்றிடங்கள் நிரப் பப்படவுள்ளன.

இப்பதவிக்கு மேற்படி துறைசார் பயிற்சிகளில் NVQ V அல்லது NVQ IV சான்றிதழ்களுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பயிற்சி அல்லது தொழில் அனுபவம் வேண்டப்படு கின்றது.

தகுதியானவர்கள் தங் கள் விண்ணப்பங்களை கடித உறையின் இடது பக்கத்தில் "விரிவுரையா ளர்களுக்கான விண்ணப் பக் கோருகை 2024" என குறிப்பிட்டு உதவிப்பணிப் பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, மாவ ட்டப் பணிமனை,155ம் கட்டை,கிளிநொச்சி எனும் முகவரிக்கு எதிர் வரும் 24.12.2024க்கு முன் அனுப்பி வைக்குமாறு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கிளி நொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் இரா.அகிலன் தெரிவித்துள்ளார். (ம-7)

# கொழும்பில் பிரபல ஹோட்டலில் தீ விபத்து

கொழும்புக் கோட்டை மத்திய வங்கிக்கு முன்பாக அமைந்துள்ள 9 மாடி களைக் கொண்ட பிரபல ஹோட்டல் ஒன்றில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட் டுள்ளது.

குறித்த ஹோட்டலின் 07வது மாடியில் குறித்த அசம்பாவிதம் இடம்பெற் றுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகைதந்த கொழும்பு மாநகர சபை யின் தீயணைப்புப்பிரிவி னர் ஹோட்டலில் சிக்கியி ருந்த வெளிநாட்டவர்கள் மற்றும் ஊழியர்களை தீய ணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்தி மீட்டனர்.

பிற்பகல் ஏற்பட்ட தீயா னது தீயணைப்புப்பிரிவின் துரிதமுயற்சியால் சில மணிநேரங்களுக்குள் கட் டுக்குள் கொண்டு வரப்பட் டது.

தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் 10 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டதாக கொழு ம்பு மாநகர சபையின் தீய ணைப்புப் பிரிவினர் தெரி வித்தனர்.

புகை மூட்டத்தினால் அவர்களில் சிலருக்கு லேசான சுவாசக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள் ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்-2024



கிரகநிலை - இராசியில் சனி - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகு - சுக ஸ்தானத்தில் குரு(வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சந்திரன் - இலாப ஸ்தானத்தில் சுக்கிரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் இலாப ஸ்தானத்தில்

## எதிலும் வெற்றி காண்பீர்கள்

இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் தொழில் ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் அறிவுத்திறமை கூடும். சில முக்கிய முடிவுகள் எடுப்பதன் மூலம் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாக நேரிடலாம். கவனமாக இருப்பது நல்லது. மற்றவர்களின் செய்கையால் கோபம் ஏற்படலாம். நிதானம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும்.

தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு இலாபம் தராவிட்டாலும் வருமானத்திற்கு குறைவு இருக்காது. தொழில் விரிவாக்கம் செய்யும் திட்டத்தை தள்ளி போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. மற்ற விடயங்களில் தலையிடாமல் இருப்பது வீண் பிரச்சினை வராமல் தடுக்கும்.

கணவன் - மனைவிக் கிடையே எதையும் மனம் விட்டு பேசி அதன் பிறகு செய்வது நன்மை தரும். குடும்பத்தில் அமைதி உண்டாக கோபத்தை குறைப்பது நல்லது. பெண்களுக்கு அறிவுபூர்வமாக செயற்பட்டு சில முக்கிய முடிவு எடுப்பதன் மூலம் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த காரியம் நிறைவேறும். அடுத்தவர் விடயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு பாதுகாப்பு அவசியம். பொருள் வரவில் குறைவு ஏற்பட வாய்ப்பு இல்லை. எனினும் வேலை செய்யும் இடத்தில் சிறு சிறு பிணக்குகள் வந்து மறையும். கோபம் கலந்த வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நன்று. அரசியல் துறையினருக்கு உறுதியும், துணிவும் நிறைந்திருக்கும்.




பிரபலங்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். பணியின் நிமித்தம் வெளியூர் செல்ல வேண்டி வரலாம். அண்டை அயலாருடன் இருக்கும் மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும். மாணவர்களுக்கு எதிர்காலத்தை பற்றிய எண்ணம் உண்டாகும். மேல்படிப்பு பற்றிய சிந்தனையில் ஈடுபடுவீர்கள். சக மாணவர்களின் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது.

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். வாழ்க்கை துணையின் உடல் நலனில் அக்கறை தேவை. சிறிய விடயங் களுக்கு கூட கோபம் வரலாம். அதனால் உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. விபரீத ஆசைகள் ஏற்படலாம். கவனம் தேவை.

**சதயம்:** இந்த மாதம் பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்களில் சாதகமான பலன் பெறுவீர்கள். உங்களது பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது. உங்கள் பொருட்களை கவனமாக வைத்துக் கொள்வது நல்லது.

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. நட்சத்திர அதிபதி குரு சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். பயணம் மூலம் இலாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்கள் நட்பு உண்டாகும். வாகன மூலம் இலாபம் வரும். அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

**பரிகாரம்:** விநாயக பெருமானை அறுகம்புல்லால் அர்ச்சனை செய்து தீபம் ஏற்றி வழிபட காரிய வெற்றி உண்டாகும். தடை தாமதம் நீங்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன்

**அதிஷ்ட தினங்கள்:** 16, 17

**சந்திராஷ்டம தினங்கள்:** 23, 24



கிரகநிலை - ராசியில் ராகு - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு(வ) - பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் - களத்திர ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சந்திரன் - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார் 15-12-2024 அன்று சூரியன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் இலாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் அனைத்து கிரக சஞ்சாரமும் உங்களுக்கு சாதகம் தரும் வகையில் இருக்கிறது. பொருட் சேர்க்கை உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். செவ்வாய் சஞ்சாரம் இட மாற்றத்தை ஏற்படுத்தும். எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை உண்டாகும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம் கவனம் தேவை.

தொழில் வியாபாரம் எதிர்பார்த்ததை விட குறைவான லாபம் தரும்.செலவுகள் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் விவகாரங்களில் கொடுக்கல் வாங்கலிலும் எச்சரிக்கை தேவை. பொறுப்புகள் கூடும்.

குடும்ப ஸ்தானத்தை அதன் அதிபதி செவ்வாயே அலங்கரிப்பதால் குடும்பத்தில் இருப்பவர்களால் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல் நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு பூர்த்தியாகும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதன் மூலம்

## பொருட் சேர்க்கை உண்டாகும்

செலவு கூடும். விருந்தினர் வருகை இருக்கும்.

பெண்களுக்கு பயணங்கள் செல்ல நேரிடலாம். எடுத்த வேலையை செய்து முடிக்க காலதாமதமாகலாம். வழக்கத்தை விட கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கலைத்துறையினருக்கு வெளிநாடு வாய்ப்புகள் தேடி வரும். நண்பர்களால் இருந்து வந்த தொல்லைகள் தானாக விலகும். கண்களில் உபத்திரவம் ஏற்படாமல் இருக்க கவனம் தேவை.

அரசியல் துறையினருக்கு உங்கள் கடமைகளைச் சரிவர செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும். அறிவாற்றலும் செயல்திறமையும் கூடும். உழைப்பு வீண் போகாது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் நேரம் பாடங்களை படிப்பது நல்லது. பொறுப்புகள் அதிகரிக்கும்.




**பூரட்டாதி 4 ஆம் பாதம்:** இந்த மாதம் பல விதத்திலும் புகழ் கூடும். மற்றவர்கள் பிரச்சினைகளில் வாதாடி வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம் விரிவாக்கம் செய்ய தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். மேலதிகாரிகள் உதவி கிடைக்கும். சக ஊழியர் மத்தியில் இருந்து எதிர்ப்புகள் விலகும்.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுபகாரியம் நடக்கும். நிலம், வீடு மூலம் இலாபம் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். சுவையான உணவு கிடைக்கும். மனோ பலம் கூடும்.

**ரேவதி:** இந்த மாதம் புதிய நபர்கள் அறிமுகமும் அவர்களால் உதவியும் கிடைக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. பயணம் செல்ல வேண்டி இருக்கும். வீண் அலைச்சல் உண்டாகும். எதிர் பார்த்த காரியம் வெற்றிகரமாக நடந்து முடியும். பணவரத்து இருக்கும். எதிர் பார்த்த உதவியும் கிடைக்கும்.

**பரிகாரம்:** நவக்கிரக குருவை வியாழக்கிழமையில் வணங்கி வர வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். மன அமைதி ஏற்படும். **அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி **அதிஷ்ட தினங்கள்:** 18, 19 **சந்திராஷ்டம தினங்கள்:** 25, 26, 27

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7ஆம் திகதி...

உருவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மேற்கு வடமேற்குத் திசை நோக்கி நகர்ந்து இலங்கைக்கு அருகே வரும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை தென்மேற்கு வங்காள விரிகுடாவின் தெற்கு அந்தமான் தீவுகளுக்கு அருகில் மீண்டும் ஒரு குழப்பநிலை உருவாகி வருவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் இது புயலா?, காற்றழுத்த தாழ்வு மண்டலமா? என்பதைக் கூற முடியாது எனவும் எதிர்வரும் 9, 10, 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் மறைமுக பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் 9ஆம் திகதிக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மழை பெய்யும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

**மஹஜன சம்பத**
திகதி 2024.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 5676
ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 2 6 9 9 0 2
**அத சம்பத**
ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 9 9 0 2
சீட்டிழுப்பு இலக்கம் 0251
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

**தன நிதானய**
திகதி - 2024.12.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1706
P 01 11 67 78 P
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட ஆங்கில எழுத்து
Double Chance இலக்கம் 24897
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

**மெகா பவர்**
திகதி 05/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2024
வெற்றி எழுத்து: O — சுப்பர் இலக்கம்: 23 — வெற்றி இலக்கங்கள்: 29 52 57 65
Double Chance 158852
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

**லக்கி 7 VIP**
திகதி 2024.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 0502
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | L7 எழுத்து
U 6 6 8 3 5 0 U
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3918
சீட்டிழுப்பு திகதி | 05.12.2024
ஆங்கில எழுத்து: V — வெற்றி இலக்கங்கள்: 26 49 55 76
விசேட வெற்றி எழுத்து: V
இரட்டிப்பு டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 105235
தேசிய லொத்தர் சபை

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 985
வெற்றி இலக்கினம்: மேஷம் — வெற்றி இலக்கங்கள்: 02 07 22 37 — விசேட இலக்கினம்: மேஷம்
தன யோக இலக்கம் 087817 தேசிய லொத்தர் சபை நாளுக்கான விதி எண் 07

## சுழிபுரத்தில்...

விபத்திற்குள்ளானதில் மாணவன் ஒருவர் உயிரிழந்ததுடன் இன்னொரு மாணவன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை சுழிபுரம் சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்கும் மூளாய் பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த முருகசோதி ஸ்ரீபானுசன் (வயது-17) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

நண்பரை பின் ஆசனத்தில் ஏற்றிக்கொண்டு பொன்னாலை - காரைநகர் வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் சென்றபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் சுழிபுரம் சந்தியில் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் மாணவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்த நிலையில் படுகாயமடைந்த மற்ற மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

## இருபாலையில்...

சேர்ந்த நிரோசன் விமாத் என்ற நான்கு வயது சிறுவனே உயிரிழந்தவராவார்.

கடந்த 23ஆம் திகதி சிறுவன் அயல் வீட்டுச் சிறுவனுடன் விளையாடிவிட்டு கிணற்றடியில் கை கழுவிக் கொண்டிருந்தபோது கையில் இருந்த சவர்க்காரம் தவறி விழுந்ததில் சவர்க்காரத்தின் மேல் சிறுவன் காலை மிதித்ததால் தவறிக் கிணற்றில் வீழ்ந்துள்ளான்.

இதனையடுத்து கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

## பென்சிலை...

ழுந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறை திருமால்புரம் வல்லிபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் மூன்றரை வயதுடைய ரஜீவன் சுஜித் என்கின்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் தனது கையில் பென்சில் ஒன்றுடன் சென்றுகொண்டிருந்தபோது, அது தவறி நீர்தேக்கத்தில் வீழ்ந்துள்ளது.

அதனை எடுப்பதற்காக குறித்த நீர்த்தேக்கத்தில் சிறுவன் இறங்கியவேளை நீரில் மூழ்கியுள்ளார்.

அதனை அவதானித்தவர்கள் உடனடியாகச் சிறுவனை மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றவேளை, சிறுவன் ஏற்கெனவே இறந்துள்ளதாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## கிளிநொச்சியில்...

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாதன் திட்டம் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் 14 வயது மகன் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன் அதிக மது போதையில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,100)

## ஊடக சுதந்திரம்...

வித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் எந்த நேரத்திலும் அரசாங்கத்தைக் கேள்விக்குட்படுத்தவோ விமர்சிக்கவோ ஊடகங்களுக்கு எந்தத் தடையும் இல்லையென்றாலும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு பாதகமான பொய்யான தகவல்களை வெளியிட வேண்டாம் என ஊடக நிறுவனப் பிரதானிகளிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் பல தசாப்த காலங்கள் நாடு யுத்தத்திற்கு முகம் கொடுத்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இனவாதத்தை மீண்டும் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும், ஊடக சுதந்திரத்தை எந்த வகையிலும் தடுக்கவோ, மட்டுப்படுத்தவோ தாம் தயாரில்லை எனவும் தெரிவித்தார். (ம-7)

## பரிந்...

அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மதுபான அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பில் நிதியமைச்சு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு பரிந்துரைத்த அரசியல்வாதிகளின் பெயர்ப் பட்டியல் அனைத்து மக்களுக்கும் தெரியும் வகையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அனுமதிப் பத்திரம் பெற்றவர்களின் பெயர்களைப் போல் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சிபாரிசு செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகளின் பெயர்களை வெளியிடுமாறு அமைச்சரிடம் வலியுறுத்திய பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

## அமெ...

கான பணியகத்தின் உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ, நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், ஊழலுக்கு எதிராகப் போராடுதல், மக்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டு முயற்சிகளை முன்னெடுப்பதே டொனால்ட் லூவின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும். (ம-7)

**சுப்பர் தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள்**
05.12.2024 வெற்றி வாரம் 384 வர்ணம்
ஆங்கில எழுத்து: Z — மற்றும் வெற்றி இலக்கம்: 2 8 5 8 9 1
சேகண்ட் சான்ஸ் 29749
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26.704.843.20
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 2650 — வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2024.12.05 — தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 11 24 46 61 — ஆங்கில எழுத்து: Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,181,584.80
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா Shanida**
திகதி 05.12.2024 வெற்றி வாரம் 4811 வர்ணம்
வெற்றி இலக்கங்கள்: 19 38 41 58 — ஆங்கில எழுத்து: G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,374,902.40
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 34931
அபிவிருத்தி லொத்தர் சபை DLB www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சசிரி**
வெற்றி வாரம் 571
சீட்டிழுப்பு திகதி 05.12.2024 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 03 | 24 | 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
அபிவிருத்தி லொத்தர் சபை DLB www.dlb.lk

**ராசி**
சீட்டிழுப்பு வாரம் 4362 — வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 05.12.2024 — தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 17 27 39 53 — கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,560,099.20
விசேட இலக்கத்திற்கு 148884
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**கப்றுக**
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 23 (சுப்பர் இலக்கம்) 24 26 53 72
சீட்டிழுப்பு வாரம் 1826 — திகதி 05.12.2024 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,305,151.60
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி ADA KOTIPATHI**
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2476
வர்ணம்:
சீட்டிழுப்பு திகதி: 2024.12.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,811,646.40
வெற்றி இலக்கங்கள்: 14 17 70 74 — ஆங்கில எழுத்து: B
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 132241
அபிவிருத்தி லொத்தர் சபை DLB www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**செம்மொழி**
கல்வியகம் -தாவடி
(தாவடிப் பாடசாலைக்கு அருகில்)

**தமிழ்மொழியும் இலக்கியமும்**
க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான
அலகு ரீதியிலான
கடந்தகால
ஏனைய பயிற்சி
வினாக்களின் தொகுப்பு மீட்டல் வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
ஆ.பிருந்தாபன்
077-2550807
(8692)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1731)

**மொத்தக் கொள்வனவு**
அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 121 5546
48/=
80/=
(599)

## ஐ.எம்.எப்...

இது குறித்து அவர் தெரிவிக்கையில், எனது அமைச்சிலுள்ள நிறுவனங்களை எடுத்துப்பார்த்தால் புல்மோட்டை கனிய மண் நிறுவனம் இருக்கிறது. அங்கு எண்பதாயிரம் மெட்ரிக் தொன் இல்மனைட் இருக்கிறது. அதனை விற்பனை செய்யமுடியாத நிலைமை காணப்படுகிறது.

கொடுக்கல் வாங்கல் செய்த வர்த்தகர் ஒருவர் இப்பொழுது அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்திருக்கிறார். இரண்டு மூன்று பேர் சேர்ந்து இந்த ஒப்பந்தத்தைச் செய்து விட்டு அரச நிறுவனங்களுக்கு எதிராக இப்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. தற்பொழுது இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சீனிக்கைத்தொழிற்சாலையை எடுத்துப்பார்த்தால் ஆசியாவுக்கே சீனியை விற்பனை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை நாம் வைத்திருந்தோம். அதனை முன்னாள் அமைச்சரின் நண்பர்கள் தான் நடத்திச் சென்றார்கள். தாங்கள் உற்பத்தி செய்யும் சீனியை கொண்டுசெல்லாமல் அதனை தேக் கிவைத்துக்கொண்டிருக்கி றார்கள். செவனகல களஞ்சியத்தில் அந்த சீனியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அவர்கள் சந்தைக்கு விடுவிக்கிறார்கள் அவை தற்போது மிகவும் மோசடியான நிறுவனங்களாக இருக்கின்றன.

சீமெந்துக் கைத்தொழிற்சாலைகளும்இவ்வாறுதான்காணப்படுகின்றன. இலங்கைக்கு இறக்குமதி செய்பவர்கள் தான் கைத்தொழிற்சாலையை நடத்துகிறார்கள். அப்போது இருந்த தலைவர்கள் காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலையை உருவாக்கினார்கள்.

இலங்கைக்கு மாத்திரமல்ல வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் தான் காங்கேசன்துறையில் சீமெந்துக் கைத்தொழிற்சாலையை உருவாக்கினார்கள்.

32 மெகா வாட்ஸ் மின்சார நிலையமொன்றும் இருக்கிறது. அவ்வாறு தான் அதனை உருவாக்கினார்கள். ஆனால் அவற்றை விற்பனை செய்வதற்கு கடந்த அரசாங்கம் திட்டமிட்டது.

அதற்கு சர்வதேச நாணயநிதியத்தை காரணம் காட்டியது. சர்வதேச நாணய நிதியம் சொல்வதால் வேறு வழியில்லாமல் அவற்றை வேறு திட்டங்களுக்கு கொடுக்கின்றோம் என்றார்கள்.

ஆனால் ஐ.எம்.எப் ஐ நாங்கள் கேட்டால் அவர்கள், நாங்கள் விற்க சொல்லவில்லை கடந்த அரசாங்கம் தான் அதனை விற்பதற்கு முன் மொழிந்தது என்று IMF ஐ சேர்ந்த வர்கள் எங்களிடம் கூறுகிறார்கள். அதனை வருமானம் பெறும் வழியில் நடத்தி செல்லுமாறு தான் நாங்கள் கூறினோம்.

ஆனால் விற்பனை செய்ய முன் மொழிந்தது கடந்த அரசாங்கம் தான் என்று அந்த அதிகாரிகள் எங்களிடம் கூறினார்கள் என்று தெரிவித்தார்.(ம-7)

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு :
www.villagehotel.lk
077 544 8503
(2633)

## ஏழாலையில்...


நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றிருந்தவேளை மதியம் வீட்டின் கூரையை பிரித்து இந்த திருட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் குறித்த நகையை திருடிய, அதே பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். இதன் போது அவர் திருடிய நகையும் மீட்கப்பட்டது. அவர் ஏற்கனவே பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

**வேலையாட்கள் தேவை**
( La Passion )
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு முடி வெட்டுவதற்கு ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
076 759 3357
(2697)

**தவறிவிட்டது**
“காந்தியின் ஆடை தந்த விடுதலை” ,
“மகாத்மா காந்தியின் வாழ்வும் விழுமியங்களும்”
ஆகிய நூல்கள் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
மிகவும் பேருதவியாக அமையும்.
சன்மானம் உண்டு.
077 662 4377
(C-1729)

# மரண அறிவித்தல்



மலர்வு
08.05.1936

உதிர்வு
04.12.2024

## திருமதி செல்லம்மா அரியரத்தினம்

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா அரியரத்தினம் அவர்கள் 04.12.2024 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை ராசம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற அரியரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, கனகரத்தினம் மற்றும் சிதம்பரேஸ்வரி, சிவன்செயல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீபாலச்சந்திரன் காலஞ்சென்றவர்களான ஸ்ரீரஞ்சினி, விக்கினேஸ்வரன் (சுவிஸ்) மற்றும் சூரியகலா, கெங்காதரன்(சுவிஸ்), கௌரி, காசியானந்தன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சரோஜினிதேவி, தர்மலிங்கம், வனஜா (சுவிஸ்), குமாரகுலசிங்கம், சிவநந்தினி(சுவிஸ்), முத்துராசா, விஜிதா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், தனபாலசிங்கம், யோகநாதன், பரராஜசிங்கம், சிவசுப்பிரமணியம் மற்றும் சிதம்பரநாதன் காலஞ்சென்றவர்களான ராசலட்சுமி, சரஸ்வதி மற்றும் றஞ்சி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுபத்திரா (பிரான்ஸ்), ஸ்ரீபகீரதன், சுபாசினி, சுதர்சன்(கனடா), சுமித்திரா, சுவிதா, நிரோஷன்(சுவிஸ்), காலஞ்சென்ற நிதர்ஷன் மற்றும் நிலாவரி(சுவிஸ்), விவாகரன், வேணுகா(சுவிஸ்), சங்கீர்த்தனா(பின்லாந்), வசீகரன், அபிநயா(சுவிஸ்), அபிராமி(சுவிஸ்), பிரஷான்(சுவிஸ்), மிதுலா, மதுரா, கௌசிகன், அனிதா(சுவிஸ்), ஆர்த்திகன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரமிதா(பிரான்ஸ்), சஜீவன்(பிரான்ஸ்), ரக்ஸனா(பிரான்ஸ்), பிரணவி, அருணிகா, கேசினி, டினுசன், கவிஸ்ரி, ஸ்ரீனிகா, ஜஸ்மிகா, தஸ்விகா, அமித், ஆத்விகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.12.2024 இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அங்களப்பாய் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்
077 33 22 205

(2694)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.